அஸ்வினியின்
மாயக்காரி
நேஷனல் பிக்சர்ஸ் ரிலீஸ்
(தமிழ்)
G.H.RAO

மாயக்காரி

நடிகைகள்

இந்துமதி	...	ஸ்ரீமதி. அஞ்சலிதேவி
மாயக்காரி	...	,, லக்ஷ்மிகாந்தம்
குறத்தி	...	,, S. பாலசரஸ்வதி
லவங்கி	...	,, சீதா
ராணி	...	,, அன்னபூர்ண
ஹோட்டல்பெண்	...	,, நிர்மலா

நடிகர்கள்

பிரதாப்	...	ஸ்ரீ. நாகேஸ்வர ராவ்
பாஸ்கர்	...	,, முக்காமலா
கோவிந்தன்	...	,, சிவராவ்
குறத்தலைவன்	...	,, ராஜா ரெட்டி
அரசன்	...	,, காடேபல்லி
வீர்சிங்	...	,, கோடீஸ்வர ராவ்
மாதவி	...	,, ராமமூர்த்தி
மாதவன்	...	,, சீதாராம்
கிழ மாயக்காரி	...	,, கோடீஸ்வர ராவ்
தெருக்கூத்து கோஷ்டியார்	...	,, நரசிம்மம், ஜிண்டான், சத்யம், கமலா, சுசீலா

மற்றும் :—ஜோசப், தசரதராவ், அம்மிரெட்டி, கன்னய்யா முதலியோர்.

டெக்னீஷியன்கள்

டைரக்ஷன் :	...	Mr.	ஸ்ரீதர்
ஒளி :	...	,,	B. S. ரங்கா
ஒலி :	...	,,	T. S. ரங்கசாமி (ரேவதி ஸ்டுடியோ)
சங்கீத டைரக்ஷன் :	...	,,	ஆதி நாராயணராவ்
டான்ஸ் :	...	,,	வேதாந்தம் ராகவய்யா
வசனம் :	...	,,	சோமயாஜுலு
பாடல்கள் :	...	,,	கம்பதாஸன் & நரசிம்மன்
ஆர்ட் :	...	,,	T. V. S. சர்மா & வாலி
எடிட்டிங் :	...	,,	R. M. வேணுகோபால்
மேக்கப் :	...	,,	K. கோபால் ராவ்
ஆடைகள் :	...	,,	B. நாராயணமூர்த்தி
புரொடக்ஷன்	...	,,	லக்ஷ்மணமூர்த்தி
பப்ளிஸிடி :	...	,,	V. நாகேஸ்வர ராவ்

உதவி

டைரக்ஷன் :	...	Mr.	லக்ஷ்மண ராஜ்
ஒளி	...	,,	கிருஷ்ணசாமி & பதி
சங்கீதம் :	...	,,	M. ரங்க ராவ்
எடிட்டிங் :	...		N. S. பிரகாசம் & வெங்கடேஸ்வர ராவ்
புரொடக்ஷன் :	...		ராஜா ரெட்டி & D. தசரத ராவ்

ஸ்டுடியோ

சோபனுசலா

ரேவதி ஸ்டுடியோவில், ஆர்-ஸி-ஏ-& வெஸ்டர்ன் எலக்ட்ரிக் ஸிஸ்டத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

அஸ்வினி பிச்சர்ஸ்சாரின் தயாரிப்பு.

மாயக்காரி—கதையின் சுருக்கம்

விளையாட்டே வினையாகும் என்ற ஆன்றோர் சொல் இக்கதைக்கு அடிப்படையாகும். ஒருநாள், பொருமையும் பொச்சரிப்புமே உருவாகக்கொண்ட சேனாதிபதி பாஸ்கர வர்மனுக்கும், அழகில் மன்மதனையும் வெல்லும் தோற்றமுடையவனும், அரசனின் மருமகனுமான பிரதாபுக்கும் அரண்மனையில் விளையாட்டு வாள் போட்டி நடக்கிறது. உராயும் கத்திகளின் முனையில் சென்ற அரசிளங் குமரி இந்துமதியின் பார்வை, அக்கத்தியினூடே சென்று, பிரதாபின் கண்களைத் தாக்கி, அக் கண்களின் ஒளியில் பதிவடைகிறது. இதைக் கண்ணுற்ற பாஸ்கர் கண்ணொளி, தீப்பொறியாக மாற அதே பொறியின் ஒளிநய வாள் முனையில் காண விரும்புகிறான்—ஆனால் பொறியின்றி ஆறுவது சகஜம்தானே. இயற்கைக் கூற்றுக்கு இரையானான் பாஸ்கரன்—வெற்றி பிரதாபனுக்கே. இந்நிகழ்ச்சி மன்னனையும் மகாராணியையும் இந்துமதியின் எதிர்காலத்தை ஆலோசிக்கத் தூண்டியது. அரசனும் அரசியும் அந்தரங்கமாக, எவனுக்கு இந்துமதியை மணம் செய்விப்பதென்று ஆலோசித்து முடிவில் பிரதாபே இந்துமதிக்கு ஏற்றவன் என்றும், உடனே திருமணத்தை முடிப்பதென்றும் தீர்மானிக்கிறார்கள். இச் சம்பாஷணையை மறைவாகக் கேட்டுக்கொண்டிருந்த இந்துவின் தோழி லவங்கி, இந் நற்செய்தியை இந்துமதியிடம் சொல்ல விரைந்தேகிறாள்—அந்தப்புரத்தின் வாயிலில் மறைவாக நிற்கும் பாஸ்கரனைக் கண்டு அச்சமுற்று வேறு திக்கை நோக்கி விரைந்து போகிறாள். இந்துமதியே தன் இன்ப ராணியென்று மனப்பால் குடிக்கும் பாஸ்கரனுக்கு மன்னரின் தீர்மானம் பேரிடிபோலாயிற்று—அவன் உடலின் இரத்தம் பொங்கியெழுந்தது—மனதில் கலக்கம் இருண்டு கொண்டது. வெறி பிடித்தவனைப்போல் விரைந்து செல்கிறான்.

நிற்க, லவங்கி, இந்துமதிக்கு நற்செய்தியைத் தெரிவிக்கிறாள். இந்துமதியின் ஆனந்தத்திற்கு எல்லையில்லாது போயிற்று. தன் மனோரதம் விரைவில் ஈடேறுவதைக் கருதி தன் தோழி லவங்கியுடன் தேவியின் சன்னதிக்குச் செல்லத் தீர்மானிக்கிறாள். பாஸ்கரின் கையாள் கோவிந்தனும் லவங்கி

யின்மூலம் செய்தியைத் தெரிந்துகொள்ளுகிறுன். பாஸ்கருக்கு இவ்விஷயத்தை அறிவிக்க பாஸ்கரின் அந்தப்புரத்திற்கு வர, அங்கு பாஸ்கர் சீறும் வேங்கைபோல் சினத்துடனிருப்பதைக் கண்டு நடுங்குகிறுன். அச்சமயம் பாஸ்கரின் பிரதம கையாளர் வீர்சிங்கும் அங்குவர பாஸ்கர் அவனை அருகில் அழைத்து ரகசியமாக சில ஏற்பாடுகளைச் சொல்லி, அதற்கு அவன் சித்தம் என்று பதில் அளித்துவிட்டுப் போகிறுன்.

அன்றையதினமே, மாலை நேரத்தில், நகரின் எல்லையிலுள்ள அம்பிகையின் சந்நிதானத்தில் இந்துமதி தன் தோழியருடன் தேவிக்குப் பூஜை செய்யும்போது பாஸ்கரின் ஆட்களால் பலாத்காரமாகக் கடத்தப்படுகிருள். இச் செய்தி காட்டுத் தீயைப்போல் நகர் முழுவதும் பரவுகின்றது. மன்னனும் மகாராணியும் மாபெரும் துயரக் கடலில் ஆழ்கிருர்கள். தம் செல்வக் குழந்தையைக் கண்டுபிடிக்கும்படி பாஸ்கரை வேண்ட, அவன் ஒன்றும் அறியாதவனைப்போல் நடித்து முதலைக் கண்ணீர் விடுகிறுன். முடிவில் தன்னுல் இயன்றதைச் செய்வதாகச் சொல்லி வெளியேறுகிறுன்.

பாஸ்கர் தன் சூட்சி வெற்றிப்பெறுவதை நினைத்து அகமகிழ்ந்து அரசனையும் அரசியையும் காவலில் வைத்து, நாட்டின் மக்களைத் தன் வசப்படுத்திக் கொள்ளுகிறுன். லவங்கி, இந்துமதி கடத்தப்பட்டச் செய்தியை பிரதாபுக்கு அறிவிக்கிருள். தவிரவும், தான் கோவிந்தனைக் கொண்டு இளவரசி இருக்கும் இடத்தை யறிந்து வருவதாகவும் சொல்லிவிட்டு, நகரின் எல்லைக் கப்பாலுள்ள பாழ்கோட்டை வாயிலில் தன் காதலன் கோவிந்தனைச் சந்தித்து, இளவரசி அங்குக் காவலில் வைக்கப்பட்டிருப்பதை அறிந்து பிரதாபுக்கு வந்து தெரிவிக்கிருள். லவங்கியின் சாகசத்தினுல், இந்துமதி பிரதாபால் காப்பாற்றப்பட்டு, இந்துமதியும் பிரதாபும் குதிரைமீது அந் நகரைவிட்டு வெளியேற, இதைக்கண்ட பாஸ்கரின் வீரர்கள் பின்தொடர்ந்து முடிவில் ஏமாற்றமடைந்து கோட்டை வாயிலுக்கு மீண்டும் வந்து சேர்கிருர்கள். பாவம் லவங்கி சிறையில் அடைக்கப்படுகிருள். பாஸகர் தன் ஆட்களின் மதியீனத்தைக் கண்டித்துக் கடுமையான தண்டனை கொடுக்கிறுன். தவிர, தக்க பலத்துடன் இந்துமதியையும் பிரதாபையும். கண்டுபிடிக்க புறப்படுகிறுன்.

நிற்க, காட்டில் தப்பிய இந்துமதியும் பிரதாபும், காட்டின் மார்க்கமாய் வந்துக்கொண்டிருந்த தெருக்கூத்துக் கோஷ்டியாரைச் சந்தித்து, அவர்களுடன் இருவரும் நடிகர்களாக சேர்ந்து விடுகிறார்கள். சிலநாட்கள் கழித்து ஓர் கிராமத்தில் பேரில்லாத ராஜா ஊரில்லாத ராணியென்ற நாடகம் நடைபெறுகிறது. அதில் இந்துமதியும் பிரதாபும் முக்கியப் பாத்திரங்களாக நடிக்கின்றனர். பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதைப்போல் இவர்களைத் தேடித் திரியும் பாஸ்கரும் அவன் கூட்டத்தாரும் அந் நாடகத்திற்கு வருகிறார்கள். அங்கு பாஸ்கர், இவர்களைச் சந்தேகித்து, நாடகத்தை நிறுத்தும்படி செய்து, மேடைக்குச் சென்று, இந்துவையும் பிரதாபையும் உற்று நோக்க, அச்சமயம் நாடகம் பார்க்க வந்தவர்கள் கலவரம் செய்ய, தான் நினைத்தது தவறென்றுக் கருதி, அவ்விருவருக்கும் பரிசளித்து, ஆசீர்வதித்துச் சென்றுவிடுகிறான்.

பாஸ்கர், பின்தொடர்வதை யறிந்த பிரதாப், நாடக கூட்டத்தாரை, நந்தபுரி நகருக்கு முகாமை மாற்றும்படித் தூண்ட, அவ்வாறே மாற்றி நந்தபுரியில் நவீன நாடக மாடுகிறார்கள். அங்கு பாஸ்கரின் ஆட்கள் இவர்களின் உண்மை அடையாளத்தை யறிந்து பாஸ்கருக்குத் தெரிவிக்கிறார்கள்.

இனி நாடக கோஷ்டியுடன் இருப்பது ஆபத்தென்று அறிந்து இந்துமதியும் பிரதாபும் கோஷ்டியாருக்குச் சொல்லாமலே, வெளியேறி, ஓர் காட்டின் மார்க்கமாய் வர, அசதியால் ஓர் மாமரத்தின் அடியில் உட்கார்ந்து தங்கள் விதியை சிறிது சிந்திக்கிறார்கள். விதியின் வேகம் அவர்களை விட்டபாடில்லை. மாமரத்திலிருந்து ஒரு மாங்கனியைப் பறிக்கப் போக, காதலர்கள் பிரிக்கப்படுகிறார்கள். மாங்கனி பிரதாபை ஒரு மாயக்காரியின் குகைக்குத் தூக்கிச் செல்லுகின்றது—அங்கு பிரதாப், ஒரு மாயக்காரியின் கொடுமைக்காளாகி அவளிடமிருந்து தப்பி தன் காதலியைத் தேடிக்கொண்டு காட்டிற்கு வர, மாயக்காரி இந்துமதியைப்போல் மாறி, பிரதாபை ஏமாற்ற, பிரதாப் அதற்கும் இணங்காமல், அவளை உதறித் தள்ளிவிட்டு, தன் உண்மைக் காதலியை தேடிக்கொண்டு பித்தனைப்போல் ஓட, அதேகாட்டில் உண்மை இந்துமதி அவனை சந்தித்தபோது, அவள் மாயக்காரியாயிருக்கலாம் என்று கருதி உதறித் தள்ளிவிட்டுப் போகிறான்.

ஏமாற்றமடைந்த இந்துமதி தனக்கு மரணமே தகுந்த மார்க்கம் என்று கருதி உயிரைத் துறக்க ஓர் நதியில் விழுகிருள்.

பிரதாபின்மீது பித்தங்கொண்ட மாயக்காரி, அயர்வுடன் ஓர் பாறைமீது அமர்ந்திருந்த பிரதாபை மீண்டும் தன்னைக் காதலிக்கும்படித் தொந்திரவு செய்ய, அவன் அவளைக் கேவலமாகப் பேசிவிட்டுப் போக எத்தனிக்கும்போது, உண்மையான இந்துமதி பட்டக் கஷ்டத்தை அவனுக்கு எடுத்துச் சொல்லிவிட்டு மறைந்துவிடுகிருள். ஐயோ, தன் உண்மைக் காதலியை உதைத்து தள்ளிவிட்டு வந்தேனே என்று வருந்தி, மீண்டும் அவளைத் தேட விரைந்து ஓடுகிருன்—எங்கும் கிடைக்காமல், முடிவில் ஓர் விடுதியில் வந்து தங்குகிருன்.

ஆற்றில் விழுந்த இந்துமதி ஒரு குறக்கூட்டத்தின் தலைவனுல் காப்பாற்றப்படுகிருள்—குறத்தலைவன் இந்துமதியை தன் குடிசைக்கு எடுத்துச் சென்று, சிகிச்சை செய்து, அவள் தெளிவடைந்தவுடன், அவளைத் தனக்கு ராணியாகும்படி கேழ்க்கும் சமயம், அவன் காதலி சிங்கி அங்கு வர, அங்கு நடக்கும் நிகழ்ச்சியைக் கண்டு கோபங்கொள்ள, தலைவனுக்கும் அவளுக்கும் சண்டையாய் முடிகிறது—சிங்கி, தலைவனை சரியாக பழி தீர்த்துக்கொள்வதாகச் சொல்லிவிட்டு பிரிந்துவிடுகிருள். அவள் எண்ணம் ஈடேற பிரதாப் பாஸ்கரின் ஆட்களால் துரத்தப்பட்டு, அவளிடம் அடைக்கலம் அடைகிருன். தனக்குத் தகுதியான ஆள் கிடைத்ததைக் குறித்து சந்தோஷித்து, பிரதாபைக் கொண்டு தலைவனை தண்டிக்கச்செய்து, முடிவில் பிரதாபையே தன் கூட்டத்துக்குத் தலைவனுக்குகிருள். இந்துமதியும், பிரதாபும் ஒரே இடத்தில் தங்கியிருந்தும், இயற்கையின் விளையாட்டு அவர்களை சந்திக்க விடாது செய்துவிட்டது. இருவரும் எவ்வாறு மறுபடியும் சந்தித்தார்கள்—பாஸ்கரின் பேரவா எவ்விதம் முடிந்தது என்பதை வெள்ளித் திரையில் காண்க.

பாட்டு—1

இந்துமதி

பாக்யசாலியானேனே—என் அத்தானையே அடைந்தேனே

புண்ய பலனுமே—நான் ப்ரேமையில் வென்றேனே

நினைத்தது போலே நிறைவே காதல்
நிறைமதி யவனை அடைந்தேன் நானே ஓஹோ—ஓஹோ

புவிமேல் பயனை அடைந்தேனே
தேவியின் கருணையாமிதுவே—குல
தேவதையின் கருணை யாமிதுவே
புண்ய பலனுமே நான் ப்ரேமையில் வென்றேனே
கத்தி வீசியே வீரம் பேசியே
கத்தி சண்டை புகட்டிடுவான்

அத்தான் பரியின் லகானை பற்றிட
அது விரைந்திடவே களைப்பானே

காதல் அத்தான் களைத்தே வருவான்
கால்கள் தளர்ந்திட வருவானே—நான்
விரைந்தே ஓடி வந்திடுவேன்
அருகில் நின்று பிரியமுடன் நானே
பாதங்கள் பிடித்தே உபசரிப்பேன்
ப்ரபு சுகம் பெறவே பணி புரிவேன் (புண்ய)

குயிலின் குரலவன் கானம்ருதமே
கூவியே இன்பம் தருவானே
சரிகம பதயென ஸ்வரமெல்லாம் பாடி
சிந்தை குளிரவே செய்வானே—அவன்
விந்தைகள் கண்டு மகிழ்வேனே
தகதிமிதை யென தாண்டவ மாடுவேன் (புண்ய)

பதுங்கி பதுங்கியே வருவானே
பார்வை கள்ளனே அத்தானே—அவன்
பார்வை கள்ளனே-புவி மேலே
குறிப்புடன் என்னை குளிர் நகையுடனே
தெரியாமலென் பின் தொடர்வான்—நான்
அறியா நாணம்—அடைந்திடுவேன்—நான்
மறைவேன் கிறுகிறு எனவே ஓடி
கிறுகிறு கிறுகிறு எனவே ஓடி ஒளிந்திடுவேன்,

பாட்டு—2

இந்துமதி

ஜனனீ ஓ ஜனனீ கல்யாணி
மங்கள தாரணி மகேசன் ராணி—மகேசன் ராணி ஓ ஜனனீ

நம்பிய ஏழையும்—நானே நின் தாசியே நானே
நம்பிய ஏழையும் நானே பவானி
என் மனோகரனை கொடுத்தனையே
கோரி பக்தியாய் தொழுதிடுவோருக்கே
கோடி பொன்னருளும் தாயே—ஓ ஜனனீ

காப்பாற்றுமே எமை ஈன்ற அன்னையாய்
கருணை மேவிய சரோஜ நயனீ
புண்யமுடன் பிரஜை போஷணை செய்யவே
குங்கும தார விராதித வதனீ—ஓ ஜனனீ.

பாட்டு—3

தெருக்கூத்தாடிகள்

தன்தா—
தணதணதா—கிலாங்திமி—திமித
திமிதிமிதா—ஜலாங்திமி—ஜநத
ஜகனகு—தகணகு—தத்தணதா
தணதணதா சரஸ செவ்வாய் நேத்ர
போற்றிடு கலை விருது கேள் வீரா
ஏழ்புவி உன் நிகர் உள்ளாரா
ரூபமிகு மன்மத சிங்காரா
சிபி கர்ணனை மிஞ்சும் உதாரா
சரசாத்புத கவிதா சாரா
சங்கீதமும் நீ எம்மாரா
வாநீரத ஸம கெம்பீரா
ரண ரிபுண விஜயபல சூரா
பலே பலேயா சபா ஷையா
சல்லா மையா—தயை கூரய்யா
நீ வாவையா—நன்னுளையா ?

பாட்டு—4

[ராஜா) கதாநாயகன் மற்றுமுள்ளவர்

ராஜா கொலுவாய் வந்தார் சபைக்கே
ரவிதேஜ திலகமாக—ராஜா

சிரசினில் ரத்ன கிரீடமும் விளங்க
இருபுஜங்களில் புகழ் கீர்த்திகள் துலங்க
இடைநடுவினில் வாள் வஜ்ஜிரம் அலங்க
எடுத்த எடுத்த அடிகளின் மணி குலுங்க—ராஜா.

(ராணி) கதாநாயகி மற்றுமுள்ளவர்

ராணி கொலுவாய் வந்தார் சபைக்கே
சசிதேஜ திலகமாக—ராணி
பச்சைக்கல் பதக்கம் பவுனில் சரங்களும்
கச்சித கண்டிகை முத்தணி குலுங்க—ராணி
நாட்டுக்கும் காட்சிக்கும் பொருத்தம்
நான் ராஜா—அவள் ராணி
நலமுற நடத்தல்—நாளில் சுகமான நன்மணம்
நாடியே நீர் இன்று செய்ய வேண்டுமே நீரும்
மீறும் ஆனந்தம் பாரும்
வஞ்சியுடன் நான் கலந்தால்
வாழ்வு ஈடேறும்
வேண்டுமே நீரும்—நன்மணம் செய்ய
கன்னி காக்க வசமா ஓராசா—என்
காதல் தீர்க்க வசமா
கன்னியும் கருவும் கண்டிடாது பிள்ளை
பிறக்க செய்ய வசமா.

ராஜா—மற்றுமுள்ளவர்

கன்னி காக்க வசமே ஓராணி—உன்
காதல் தீர்க்க வசமே
கன்னியும் கருவும் கண்டிடாது பிள்ளை
பிறக்க செய்ய வசமே.

ராணி—சகாக்கள்

வித்தையாட வசமா—ஓ ராஜா
முத்தம் ஈய வசமா
அத்துமீறிடா தென்னுடன் அறிவாய்
நேரம்போக்க வசமா.

ராஜா—சகாக்கள்

வித்தையாட வசமே—ஓ ராணி
முத்தம் ஈய வசமே
அத்து மீறிடாதுன்னுடன் அறிவாய்
நேரம் போக்க வசமே.

ராணி—சகாக்கள்

சூரையும் மாமழை சாடியே வருகையில்
நேராய் தேரினில் ஏற நீவசமா—ராஜா
சதுப்பு நிலத்தில் நீந்தநீ வசமா.

ராஜா—சகாக்கள்

சூரையும் மாமழை சாடியே வருகையில்
நேராய் தேரினில் ஏறநான் வசமே—ராணி
சதுப்பு நிலத்தில் நீந்தநான் வசமே
நான் தாளமாட்டேன்—ஓ அம்மா
நான் தாபம் தாளேன்—ஓ அம்மா
என் நாதனை சேர்ப்பாய் ஓ அம்மா.

ராஜா : தாளமாட்டேன்.
ராணி : அம்மா நான் தாள மாட்டேன்.
ராணி · தாபம் தாளேன்.
சகாக்கள் : அம்மா நான் தாபம் தாளேன்.
ராணி : என் நாதனை சேர்ப்பாய்.
சகாக்கள் : அம்மா என் நாதனை சேர்ப்பாய்.
ராணி : தாளேன்—தாளேன்—தாளேன்
நான் தாள மாட்டேன்—ஓ அம்மா.

எல்லோரும்: ராஜா வாவா என் ராஜா வாராய்.

பாட்டு—5

இந்துமதி : அழகேதானே ஆகுமே தொல்லை
அதற்கு இல்லை எல்லையே
அல்லல் தருவதே தொழிலாய் கொண்ட
அரட்டைகள் தொல்லை—ஹ ஐயோ
அரட்டைகள் தொல்லை
வட்டமே யிடுவார் வீட்டை சுற்றியே
வயது வந்தவளை காண்பதற்கே—இவர்
வயது வந்தவளை காண்பதற்கே
வீணாக உயிரை வாங்கிடுவார்
விவாகமே தான் சுகமே என்றால்
வரதக்ஷிணையே வேண்டுமென்பார்
எப்படி வாழ்வதம்மா—நாமேதான்
எப்படி வாழ்வதம்மா.

பிரதாப் : ஓ கண்ணான தங்கமே கண்ணாட்டி நீயே
ஒண்டியாய் நீயே இருப்பது ஏனோ
உன்னுடன் சேரவே நானிருக்கேனே
என்னுடன் கூடியே இன்புறு நீயே
என்னை காண்பார் என்மன ராணி.

இந்துமதி : ஓ துஷ்டனே தனிமையாய் திரியும் முரடனே
தனித்தவளென்றென்னை தேடி சரஸமாய்
தோகை என்மீதே காதல் கொள்ளாதே
சஞ்சல சித்தனே போ போடா—என்னை
வஞ்சனை செய்யாதே போ—போ—போ.

ஜமீன்தார் : ஜமீன்தாரே நான் பூமிக்கு துரையே
(பிரதாப்) ராணியாய் செய்வேனே மகா ராணியாய் செய்
ஆஸ்திகள் பாஸ்திகள் தருவேனே வேனே
ஆசைகளெல்லாம் தீர்த்திடுவேன்
ஆனந்தமாகவே நீயே வா.

இந்துமதி : ஜமீந்தாருங்களா உமக்கே வணக்கம்
நிலவள மெல்லாம் நல்லாயிருக்கா
காதல் ராணிகள் சுகமே தானா
படுதாவினுள்ளே பெண்களை மூடி
அடிமைகளாக்கி பார்த்திடுவீர்—கை
பொம்மைகளாகவே செய்திடுவீர்—உம்
பிராண சங்கடமே வேண்டாம் வேண்டாம்
போங்கள் போங்கள் போட்டேன் கும்பிடு.

செட்டியார் : ஓ தளுக்கு மினுக்கியே தங்க பதுமையே
எந்தனிடம் வாவா—பந்து விளையாட வா
சொந்தமுடன் வாவா—சிங்காரி நீவா
சவுக்காருங்கள் நாங்கள் தான்—அந்த
கடவுளுக்குந்தான் அஞ்சிடமாட்டோம்
கேளடி உனக்கே கொட்டுவேன் தங்கமே
கட்டுவேன் மாடியே கட்டித்தங்கத் தூணிலே
கண்ணிமைப் போலே காத்திடுவேனே—
கண்ணே பயமேன் பொன்னான கிளியே
எந்நாளும் உன்சேவை செய்வேன் நான்
செய்வேன் நான் செய்வேன் நான்—நீ
கைவிட்டாலே சாவேன் நான்—சாவேன்
நான்—சாவேன் நான்.

இந்துமதி : சவுக்காருங்களா சலாமய்யாவே
கள்ளக் கடைத்தெரு குஷிதானு
கொள்ளைப்பணமே மலையாய் குவிந்ததா
விலைகளை உயர்த்திட வறுமை வந்திடவே
கப கப்பென வயிர் பற்றி யெறியாதா—உம்
வயிறு குளிரவே குதித்திடுவீர்—இந்த
பிராண சங்கடமே வேண்டாம் வேண்டாம்
போங்கள் போங்கள் போட்டேன் கும்பிடு.

இந்துமதி ; ஓ உழுதுண்ணும் ராஜா வாவாவா நீவாவா
பூர்வ பூஜாபலனே நீயே ராஜா
கள்ளம் கபடமே இல்லாத ராஜா
எல்லா வளமையை செய்திடும் ராஜா
வரித்தேன் உன்னையே வல்லமை ராஜா
தரித்தேன் தெய்வமாய் உனையே ராஜா.

குரூப் : ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே—எம்
விவசாயி மகன் மாப்பிள்ளை யாகிருன்—எம்
விவசாயி மகள் மணமகள் ஆகிருள்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்.

பாட்டு—6

(காதலர்கள் தர்க்கம்)

காவினில் கூவும் கோகிலம் தானே
கண்ணென திரியும் வண்டது தானே
கமழ்கின்ற இம்மா மலர் தானே
கானம் செய்தல் ஒன்றல்லவோ
காதலை போற்றும் கான மன்ரு
பூங்கொடி ஊஞ்சலை எதிர் கண்டால்
பூரிக்கும் மாதாய உணர் வன்ரு
இவ்வனத்தில் இது யாவருக்கோ
ஈடுற தேவர்கள் ஆடிடவோ—
பூவும் கண்களால் ஜாடை செய்யுதே
பூங்கொடி ஊஞ்சல் நமக்கெனவே
நீயும் நானும் ஆடிடவே

பூவிதழ் உதிர்ந்தது ருசுவல்லவோ—இந்த
பூவிதழ் உதிர்ந்தது ருசுவல்லவோ
நேசமே விரிக்கும் தேன் மலரோ இவை
நேசமே விரிக்கும் தேன் மலரோ
ஆசைகள் கோரும் கனியிதுவோ
ஆசைகள் கோரும் கனியிதுவோ

பாட்டு—7

மாயக்காரி: ஓ பரதேசி உன் பிரிய தாசி
என்னுடன் பேசி இணைவாயே
நீயே என்னை அணைவாயே (ஓ பர)
என் பாக்யமே தானே—என் பூஜா பலனே
வாராயோ ஓ பரதேசி
சுந்தராங்கனே சிந்தையில் நீயே
சொந்தமாய் நீயே சேர்ந்து கொண்டாயே
அந்தரங்கமே அலை போலே
அலைவது எல்லாம் அறியாயோ நீ
அழகனே நீ இங்கு வாராயோ நீ
ஆனந்தமாய் இன்பம் பெருவாயே—ஓ
இதுதானே நல்ல சமயம்—நாம் இன்றே மகிழ்
வோம்
மதுவாகுமே காதல் தானே—மனதை கேளாய்
விதவிதமே யென்—விரகதாபமே [ருசியாமே
இதை யுணர்ந்தாலே—இன்பமே தானே
மறந்திடுவா யுன்—மனத்துயர் நீயே—ஓ.

பாட்டு—8

இந்துமதி: ஹேவிதி! இது என்ன வேதனை என்ன வேதனை
எவ்விதமே யான் நம்ப வசமோ
கனவை போலும் இல்லையே இது
கடின சத்திய மானதே
அன்னை தந்தை இல்லம் வாசலை
அந்த ராக்ஷஸி தன்னிடம் விடுத்து
காதலே பரமார்த்த மென்றெண்ணினேன்
காலமே பகையானதே—ஆ...—
ஆசைக் கெல்லாம் ஆசை யானான்
ஆவி தனக்கே ஆவியானான்
அன்பின் ரூபனே என் பிரதாபனே
காலால் எனை உதைத் தேகினான்
தள்ளி போ என ஏசினான்
எவருக்காகவோ ஆசை
எவருக்காகவோ ஆசை
எவருக்காக நான் ஆசைக் கொள்ளுவேன்
எவருக்கென் தேகத்தின் போஷணை
எங்கு நோக்கினும் சூன்யமே அன்றோ

இன்னும் எதற்கோ வாழ்வதே
இன்னும் எதற்கோ வாழ்வதே.

பாட்டு—9

ஹேய்—ஹேய்—ஏ ஹேய்—ஹேய்—ஹேய்—
ஏ ஹேய்
வீட்டு பேச்சை நினைத்துக்கொண்டால்
கண்ணில் நீரு காணுதேடா
எப்போ செல்வோமோ—வீட்டுக் கென்றுள்—
செல்வோமோ

என்னமோ—என்னமோ—என்னமோ
அட—மொ—மொ—மொ
வீட்டை அண்டும் பயமேனோ
எங்கே எகிறி போகுது—
குட்டிப் பேச்சை செப்பமாட்டாயா
ஏ மடையனே என் ரெண்டு பேச்சை புகழ
—மாட்டாயா
ஒண்டி பாங்கை நினைச்சுகிட்டு எவன் கூட
—போனுளோ
இன்னும் எவன்கூட போனுளோ
எவனை ஜோடி கூடினுளோ
ஏது தண்ட்டா கொண்டாளோ
கொண்டாள் அடே தண்ட்டா
அடே—டா—டா—டா
தட்டாடடா—க......

பெண்: ஓஹோ—ஓஹோஹ ஓஹோ—ஓஹோஹஓஹோ
வீட்டுக்கென்ன தொந்த ராச்சு
கூட்டுக்கென்ன மிச்ச மாச்சு
பசந்தான பலகாரங்கள் தின்ருலன்ரு
பல்லின் தினவு தீர பாங்காய் தின்ருலன்ரு
கண்ணின் கனவு தீர கண்டு கொண்டாலன்ரு
வாங்கோ—இங்கே வாங்கோ வாங்க
இங்கே—வாங்கோ—வாங்கோ—பார்ங்கொ
வாங்கோ—வாங்கோ—வாங்கோ.

கோவிந்த: ஆக சரி ஆக—ஆக சரி—ஆக
ஓ ராணி—துரை சாணி
ஆக சரி ஆக—ஆக—சரி—ஆக.

பெண் : கரம் கரம் சப்பாத்திகள் ஏடு ஏடுப்பாலு ஏடு
ஏடுப்பாலு.

கோவிந்த : வரட்டும் கொண்டா அதை கொண்டா.

பெண் : சுட சுட பகோடா—பட்டாணிலே கிச்சடி
பிசி பிசி பச்சடி.

கோவிந்த : எங்கே கொஞ்சம் காணலாம்
வாயினுள்ளே போடலாம்
நீ (ஹா) வாயினுள்ளே போடலாம்
இது உனக்கு அது எனக்கு
இது எனக்கு அது உனக்கு
பேஷ் பேஷ்—லாடு.

கூட்டம் : லாடு அட லாடு.

கோவிந்த : இதோ பாரு கண்ணுல் பாரு.

கூட்டம் : பாரு அதை பாரு.

கோவிந்த : உனே கேட்கும் பேரு யாரு
யாரு—யாரு—யாரு
வெண்ணே மொத்தை பாங்கோ
உன் சின்னமுத்தம் பாங்கோ
உன் சின்னமுத்தம் பாங்கோ
இன்னும் ஒன்னும் செப்பமாட்டேன்
குள்ளத்தாரா நான் உள்ள
பேச்சை ஒப்புக் கொள்வேன்
குள்ளத்தாரா ஏ குள்ள தாரா.

பாட்டு—10

குருவே தெய்வமும் சகலமும்
குருவே என் ஜோதி நீரே
குருவே குருவே............
குருவே அன்னேயும் தந்தையும்
குரு என்பதியும் கெதியும்
குரு ஓம் நம
எல்லாம் எல்லாம் இவ்விதமே—நம்
ஜீவித பலவர்ண கம்பளமே
காரிகை கனகமே லோகமடா இது
குருவுகள் கற்பித்த தாளமடா
குரு மகா ராஜ் குரு மக ராஜ்
குரு மகா ராஜ் சத்குரு மகாராஜ்
காவுக்கு கால் கு ராவுக்கு கால் ரு
குருகுருகுரு ஜேய் ஸத்குரு

நம் கோரிக்கையே நிறைவேற வென்றாலே
ஓ மகா பக்தர்களே
கண காரியங்கள் செய்யணுமே
போகி யோகியாய் மாறணுமே
தியாகி நேகியாய் நடக்கணுமே
வேஷமே பலவே போட்டிடணும்
காஷாயந்தான் கட்டிடணும்
கள்ளென கனவென திரிந்திடணும்
கொக்கு ஜபந்தான் செய்திடணும்
மாய ஜெகமென நடத்திடணும்
மாயக்காரராய் மயக்கிடணும்
நீதிகள் செப்பியே திரிந்திடணும்
சூதுகள் செய்துதான் பிழைத்திடணும்
தாரக மந்திரமே கோரின கிடைத்தது
தன்ய னனேனே ஓ அண்ணா
மீறின காலனின் தூதர்கள் பாரினில்
மிருது வாயென மன நம்பிக்கை கொண்டேன்
—தாரக.
ஸ்ரீமத் ரமா ரமண கோவிந்த ஹரி

பாட்டு—11

காண்பேனோ—காண்பேனோ
காதல்தான் சிறிதேனும்—இனிமேல்—காண்
காதல் மூர்த்தி என்னை நீபோயெனவே
ஏது செய்தேனோ அறிகிலேனே
காதலின் நம் மனம் மாறி போகவே
ஏது மாயமோ தெரிகிலேனே
எவ்விடம் எவ்விதம் கண்ணீர் சிந்தியே
ஏதென வாடுகின்றனரோ
நம்பியதெல்லாம் பொய்யது ஆகா
நடுகடல் தனிலே விழுந்ததா ஓடம்
இந்த விசால லோகம் தனிலே
இணைத்த காதலர்க்கே இடமே யில்லையா
இன்னல் கடலுக்கே எல்லை யில்லையா
இருளே நீங்கி ஒளி வீசாதோ
எல்லா சுகங்களை தியாகமே செய்தே
என்னை நம்பியது பொய்யது தானா
இதுவே வியர்த்தமெனமுன் தெரிந்தால்
துணிவுடன் வருவேனோ.

SENGUNTHA MITHRAN PRESS, MADRAS-1.

COMING!
ANJALI PICTURES
FLOWER GIRL
(TAMIL)
NATIONAL PICTURES · MADRAS · 1